S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE வியாழன் அக்டோபர் 30 * 2025 * மலர் -1 * இதழ்-150 * VOL-1 * ISSUE-150 விலை ரூ.3 * பக்கம் -4



கோவில்பட்டியில் நடைபெற்ற முன்னாள் முதல்வர் கருணாநிதி சிலை திறப்பு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு, கனிமொழி எம்.பி., அமைச்சர் கீதாஜீவன் ஆகியோர் வெள்ளி செங்கோல் நினைவு பரிசாக வழங்கினர்.

### தென்காசியில் அரசு விழா:

# ரூ.1,020 கோடியில் நலத்திட்டங்கள்!

## முதல்வர் ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார்!!

தென்காசி, அக்.30

முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று (அக்.29) தென்காசியில் நடைபெறும் அரசு விழாவில் பங்கேற்று ரூ. 1020 கோடியில் முடிந்த பணிகளைத் திறந்து வைத்து, புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார் .பின்னர் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தென்காசி, கோவில்பட்டி பகுதிகளில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக நேற்று முதல்வர் மு.க. ஸ்டாலின்மதுரைவிமான நிலையத்துக்கு புறப்பட்டு சென்றார். அங்கு வருகை தந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு அமைச்சர்கள், திமுக நிர்வாகிகள், பொதுமக்கள் என பலரும் வரவேற்பு அளித்தனர். பின்னர் முதல்வர் அங்கிருந்து கோவில்பட்டிக்கு புறப்பட்டார்.

கோவில்பட்டியில் இளையரசனேந்தல் சாலையில் நகர திமுக அலுவலகம் கட்டப்பட்டுள்ளது. கட்டடத்தின் முன் பகுதியில் முன்னாள் முதல்வர் கருணாநிதியின் முழு உருவ வெண்கலச் சிலை நிறுவப்பட்டுள்ளது.

இந்நிலையில், புதிதாகக் கட்டப்பட்டுள்ள நகர தி.மு.க. அலுவலகம் மற்றும் முன்னாள் முதல்வர் கருணாநிதி சிலையையும் , நூலகத்தையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இதில் தூத்துக்குடி எம்.பி. கனிமொழி மற்றும் அமைச்சர் கீதா ஜீவன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.இதைத் தொடர்ந்து முதல்வர் ஸ்டாலின் இன்று தென்காசி புறப்பட்டுச் சென்றார். அவருக்கு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் தலைமையில் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன், தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலையில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து காலை 11 மணிக்கு தென்காசி மாவட்டம் சீவநல்லூர் சென்று அங்கு கலைஞர் கருணாநிதியின் கனவுஇல்லம்திட்டத்தை தொடங்கி வைத்தார் .



பின்னர் 11.15 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு அரசு விழா நடைபெறும் ஆய்க்குடி சாலை நல்லமணி கல்லூரிக்கு பின்புறம் தென்காசி மங்கம்மா சாலை சந்திக்கும் பகுதியில் அமைந்துள்ள ஜாஸ் ஸ்மார்ட் சிட்டி மைதானத்திற்கு வந்தார்.

அப்போது தென்காசி மாவட்ட மைய நூலகம், மகப்பேறு மையம் மாறும் குழந்தைகள் நல கட்டிடம், மாறாந்தையில் அரசு மேல்நிலைப் பள்ளி வகுப்பறைகள், புளியங்குடியில் சார் பதிவாளர் அலுவலகம் உள்ளிட்ட சுமார் ரூ. 1020 கோடியில் முடிவுற்ற மற்றும் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி ,நலத்திட்ட உதவிகளை வழங்கினார். zதென்காசி மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் ரூ.22,912 கோடியில் 6,03,246 பயனாளி களுக்கு நலத்திட்ட உதவிகள், ரூ.2,074 கோடியில் 37,221 வளர்ச்சித்திட்ட ப் பணிகள் என இதுவரை மொத்தம் ரூ.24,986 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் மற்றும் வளர்ச்சித் திட்டப் பணிகள் நடந்துள்ளன. விழா நடைபெறும் ஜாஸ் ஸ்மார்ட் சிட்டி மைதானம் தென் மாவட்டங்களில் முதன்முறையாக ஜெர்மன் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பந்தல் அமைக்கப்பட்டுள்ளது. பந்தலை சுற்றி காம்பவுண்ட் சுவர் போன்று தடுப்புகள் அமைக்கப்பட்டு அவற்றில் அரசின் சார்பில் 50 க்கும் மேற்பட்ட திட்டங்கள் காட்சிகளுடன் விளக்கும் வகையில்விளம்பரங்கள்இடம் பெற்றுள்ளன. விழாவை முடித்த பிறகு முதல்வர் மு.க.ஸ்டாலின் அங்கிருந்து புறப்பட்டு ஆய்க்குடி அமர் சேவா சங்கம் சென்றார். அங்கு அவரை சங்கத்தினர் வரவேற்றனர்.

நிகழ்ச்சிகளை முடித்து விட்டு அங்கிருந்து புறப்பட்டு குற்றாலம் சுற்றுலா மாளிகை சென்று தங்கினார். இன்று மாலை 5 மணி அளவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அங்கிருந்து புறப்பட்டு மதுரை சென்று இரவு தங்குகிறார். நாளை (அக்.30) காலை 7.45 மணிக்கு கோரிப்பாளையம் சென்று அங்கு தேவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார். அதன் பிறகு தெப்பக்குளம் சென்று அங்கு மருதுபாண்டியர் சிலைக்கு மாலை அணிவித்துமரியாதைசெலுத்தி விட்டு, அங்கிருந்து 8.10 மணிக்கு புறப்பட்டு 9.30 மணிக்கு ராமநாதபுரம் மாவட்டம் கமுதி பசும்பொன் செல்கிறார். தொடர்ந்து தேவர் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்துகிறார்.

பின்பு மதுரை சென்று விமானம் மூலம் சென்னை வருகிறார்.

# பிளஸ்-1 மாணவர்களுக்கு விரைவில் இலவச சைக்கிள்!

## பள்ளிக் கல்வித்துறை அறிவிப்பு!!

சென்னை, அக்.30

தமிழகத்தில் பிளஸ் 1 மாணவர்களுக்கு இலவச சைக்கிள் விரைந்து வழங்குவதற்கான வழிகாட்டுதல்களை பள்ளிக்கல்வித் துறை வெளியிட்டது.

இதுகுறித்து துறை இயக்குநர் ச. கண்ணப்பன், அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பிய சுற்றறிக்கை: 2025–26ம் கல்வியாண்டில் மாணவ, மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்க அவோன், ஹீரோ சைக்கிள் நிறுவனங்களு க்கு கொள்முதல் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. அந்தவகையில் மாணவிகளுக்கு ரூ.4,250 மதிப்பிலும், மாணவர்களுக்கு ரூ.4,375 மதிப்பிலும் சைக்கிள்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

கொள்முதல் ஆணை பெற்ற நாளில் இருந்து 15 நாட்களுக்குள் சைக்கிள்களை விநியோகிக்க தொடங்க வேண்டும். சைக்கிள் வழங்கும் திட்டம் முதல்வரால் தொடங்கிவைத்த பின், அந்தந்த மாவட்டங்களில் மாணவர்களுக்கு வழங்க வேண்டும். 3 ஆண்டு உத்தரவாத அட்டை வழங்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும். சைக்கிள்கள் விநியோ கம் செய்யப்பட்ட 6 மாதங்களுக்கு பிறகு, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் குறைந்தது 3 நாட்களுக்கு பழுது நீக்கு வதற்கான சிறப்பு முகாம் நிறுவனத்தால் நடத்தப்படுவதை உறுதிசெய்ய வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### 110 கி.மீ வேக சூறைக்காற்றுடன்

# ஆந்திராவில் கரையை கடந்த 'மோந்தா' புயல்!

## கன மழையால் 75 ரெயில்கள் ரத்து செய்யப்பட்டன!!

அமராவதி,அக்.30–

வங்கக்கடலில் உருவான 'மோந்தா' புயல், ஆந்திராவை நோக்கி நேற்று முன்தினத்தில் இருந்து பயணித்து, நேற்று இரவு கரையை கடக்கத் தொடங்கியது. மணிக்கு 17 கி.மீ வேகத்தில் காக்கிநாடா, மசூலிப்பட்டினம் அருகே 'மோந்தா' புயல் கரையை கடக்க தொடங்கியது. புயல் கரையை கடக்க தொடங்கியதில் இருந்து ஆந்திராவின் கடலோர மாவட்டங்களில் 110 கி.மீ வேகத்தில் சூறை க்காற்று வீசியது. மேலும் அங்கு விடிய, விடிய இடி, மின்னலுடன்கனமழைவெளுத்து வாங்கியது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஆந்திராவின் காக்கிநாடா, கிருஷ்ணா, எலுரு, கிழக்கு மற்றும் மேற்கு கோதாவரி, அம்பேத்கர் கோனசீமா, அல்லூரி சீதாராம ராஜூ உள்ளிட்ட 7 மாவட்டங்களில் கடலோர பகுதிகளில் தங்கியிருந்த 2 லட்சம் பேர் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான பகுதிகளில் தங்க வைக்க ப்பட்டனர். மேலும் அந்த 7 மாவட்டங்களுக்கும் இன்று காலை 6 மணிவரை அனைத்து வாகன போக்குவரத்துக்கும் தடைவிதிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து கடலோர மாவட்டங்களில் பேரிடர் மீட்புத்துறையி னர், போலீசார் உள்பட சுமார் 10 ஆயிரம் பேர் களம் இறக்கப்பட்டனர். அவர்கள் கடலோர பகுதியில் புயல் கரையை கடக்கும் பகுதியில் தீவிர ரோந்து மற்றும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். அமராவதியில் உள்ள கண்காணிப்பு மையத்தில் இருந்தவாறு புயல் பாதிப்புகள் மற்றும் முன்னெ ச்சரிக்கை நடவடிக்கைகளை ஆந்திர முதல்மந்திரி சந்திரபாபு நாயுடு முடுக்கிவி ட்டார். இந்தநிலையில் நள்ளிரவுசுமார்1 மணியளவில் காக்கிநாடாவின் தெற்கே மசூலிப்பட்டினம் மற்றும் கலிங்கப்பட்டினம் இடையே 'மோந்தா' புயல் கரையை கடந்தது. புயல் காரணமாக மசூலிப்பட்டினம், கிருஷ்ணா ஆகிய கடலோர பகுதிகளில் மின் கம்பங்கள், ராட்சத மரங்கள் ஆகியவை வேரோடு சாய்ந்தன. மேலும் இடி, மின்னலுடன் விடிய, விடிய கனமழை கொட்டி தீர்த்தது. பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை அடியோடு முடங்கியது.

புயல் காரணமாக ஆந்திராவில் இருந்து சென்னைக்கு வர இருந்த 6 விமானங்களும், சென்னையில் இருந்து ஆந்திராவுக்கு செல்ல இருந்த 3 விமானங்களும் ரத்து செய்யப்பட்டன. ஆந்திராவில் கன மழை பெய்து வருவதால் 75 ரெயில்கள் ரத்து செய்யப்பட்டன.

புயல் காரணமாக ஆந்திராவில் 3,778 கிராமங்கள் பாதிக்கப்பட்டதாக சந்திரபாபு நாயுடு தெரிவித்தார். மேலும் மோந்தா புயல் காரணமாக 1.76 லட்சம் ஹெக்டர் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டு அழிந்ததாக அவர் தெரிவித்தார். இந்த புயல் காரணமாக கபுலுபடாவில் 12.5 செ.மீ., விசாகப்பட்டினத்தில் 12 செ.மி மற்றும் ஆனந்தபுரத்தில் 11.7 செ.மீ அளவில் மழை பதிவானது.





உடுமலை முருகன் கோவில்களில் திருக்கல்யாண நிகழ்ச்சி கோலாகலமாக நடந்தது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

### கிருஷ்ணகிரி அருகே

# காட்டு யானை தாக்கி விவசாயி உயிரிழப்பு!

## இறந்தவர் உடலுடன் கிராம மக்கள் சாலை மறியல்!!



கிருஷ்ணகிரி, அக்.30–

கிருஷ்ணகிரி மாவட்டம் நாரலப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்தவர் வேணுகோபால் (50). விவசாயி. வழக்கம் போல் இவர் நெற்பயிரை காவல் காக்க நேற்றிரவு வயலுக்கு சென்றார். அப்போது அங்கு நின்றிருந்த ஒரு காட்டு யானை வேணுகோபாலை வழிமறித்து தாக்கியது. இதில் படுகாயமடைந்த வேணுகோபால் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இன்று காலையில் அந்த வழியாக சென்ற அப்பகுதி பொதுமக்கள் காட்டு யானை தாக்கி வேணுகோபால் இறந்து கிடந்ததை கண்டு அதிர்ச்சியடைந்தனர். உடனே கிராம மக்கள் ஒன்று திரண்டு காட்டு யானைகளால் தங்களுடைய உயிருக்கு பாதுகாப்பில்லை என கூறியும், இறந்த வேணுகோபால் உடலை சாலையில் வைத்து மறியலில் ஈடுபட்டனர். இதனால் அப்பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த டி.எஸ்.பி. முரளி மற்றும் போலீசார் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினார். சமரம் ஏற்பட்டதையடுத்து அவர்கள் கலைந்து சென்றனர்.



பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் 118–வது ஜெயந்தி, 63–ம் ஆண்டு குருபூஜையை முன்னிட்டு அவர் நினைவிடத்தில் நடந்த யாகசாலையில் முத்துராமலிங்கத்தேவரின் குடும்ப வாரிசுகளுடன் அ.தி.மு.க. மாணவரணி இணை செயலாளர் முன்னாள் எம்.எல்.ஏ. டாக்டர் பா.சரவணன் கலந்து கொண்டார். தேவர் நினைவிடம் மற்றும் அவர் இல்லத்தில் தேவரை தரிசித்து வணங்கினார்.



தென்காசி அருகே உள்ள பண்பொழி திருமலைக்குமார சாமி கோவிலில் கந்தசஷ்டி விழாவை முன்னிட்டு தேரோட்டம் நடந்தது. தேருக்கு பின்னால் பக்தர்கள் கும்பிடு சரணம் செய்த காட்சி.



சிவகங்கை மாவட்டத்தில் உள்ள ஏரியூர் கண்மாய் தனது முழு கொள்ளவையும் 6–வது முறையாக நிரம்பி கடல் போல் காட்சி அளிக்கிறது. இதனால் இப்பகுதி மக்கள் இங்கு சுற்றுலாவாக வந்து அழகை ரசித்தும், குளித்தும் வருகின்றனர்.



பழனியில், கந்த சஷ்டி திருவிழாவை முன்னிட்டு, துளுவ வேளாளர் மடத்தில், வேலை வணங்குவதே வேலை குழுவினரின் சார்பில், முருகன் வள்ளி தெய்வானை திருக்கல்யாணம் வெகு சிறப்பாக நடைபெற்றது. இதில் இக்குழுவினர் பாராயாணம் பாடினார்கள். மடத்தின் சார்பாக சீர்வரிசை வழங்கப்பட்டது.

# தூத்துக்குடி சிவன் கோவிலில்சூரசம்ஹாரம்: ஆயிரக்கணக்கான பக்தர்கள் தரிசனம்!

**தூத்துக்குடி அக்.29**

தூத்துக்குடி சிவன் கோவிலில் முருகன் சன்னதியில் நடைபெற்ற சூரசம்ஹாரம் நிகழ்ச்சியில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.தூத்துக்குடியில் அமைந்துள்ள சிவன் கோவில் என்று அழைக்கப்படும் ஸ்ரீ பாகம்பிரியாள் உடனுறை அருள் மிகு ஸ்ரீP சங்கர ராமேஸ்வரர் திருக்கோவிலில் அமைந்துள்ள சுப்பிரமணிய சுவாமி சன்னதியில் கந்த சஷ்டி திருவிழா ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி மகமை பரிபலான சங்கம் (கட்டளை) சார்பில் 131 ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. இந்நிலையில், இந்த ஆண்டிற்கான திருவிழா கடந்த 22ம் தேதி தொடங்கியது. திருவிழாவின் சிகர நிகழ்ச்சியான சூரச ம்ஹாரம் நடைபெற்றது.

முன்னதாக முருகன் வள்ளி தெய்வானைக்கு சிறப்பு அபிஷேகம் அன்னாபிஷேகம் தீபாராதனை நடைபெற்றது. பின்னர் யாகசாலை பூஜை ஆறுமுகஅர்ச்சனைமுடிந்ததும் மாலை 4 மணிக்கு பூஜையில் இருந்து முருகப்பெருமாள் எழுந்தருளி வேல் வாங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. வேல் வாங்கிய பின்பு முருகப்பெருமாள் சப்பரத்தில் தேரடிக்கு வந்தார். அங்கு சூரசம்ஹாரம் நடைபெற்றது. இதில் நரகாசுரன் முதலில் தாரகாசுரன் (கஜமுகன்) வேடத்தில் வந்தார் அவரை சுப்பிரமணிய சுவாமிசூரசம்ஹாரம் செய்தார் பின்னர் சிங்க முகாசூரன் தலையும் இறுதியாக சூரபத்மன் சூரன் தலையும் சுப்பிரமணியசாமி வதம் செய்தார். ஒவ்வொரு தலையையும் வதம் செய்யும்போது கூடியிருந்த ஏராளமான பக்தர்கள் வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா கந்தவேல் முருகனுக்கு அரோகரா என்று விண்ணை பிளக்கும் வகையில் கோஷமிட்டனர். சூரசம்ஹாரம் முடிந்ததும் சுப்பிரமணிய சுவாமி வள்ளி தெய்வானையுடன் அலங்காரமாகி தீபாராதனைக்கு பின்கோவிலுக்கு புறப்பட்டு சென்றார.

இதில் சிவன் கோவில் பிரதான பட்டர்கள் செல்வம் மற்றும் சண்முகம் பட்டார்கள் ஆகியோர் சூரசம்ஹாரம் பூஜைகளை செய்தனர். இதற்கானஏற்பாடுகளை ஸ்ரீசுப்பிரமணியசுவாமி மகமை பரிபலான சங்கத்தின் தலைவர் பிரமநாயகம், செயலாளர் எம்.எஸ்.எஸ். கந்தப்பன், துணைத் தலைவர் ராமலிங்கம், உதவிச் செயலாளர் தியாகராஜன் ஆகியோர் செய்து இருந்தனர். நாளை 28ஆம் தேதி சுப்பிரமணியசாமிக்கு திருக்கல்யாணம் சிவன் கோவிலில் நடைபெறுகிறது.

இதை முன்னிட்டு மாலை ஆறு மணிக்கு தோல் மாலை மாற்றும் நிகழ்ச்சி தெற்கு ரத வீதியில் நடைபெறுகிறது அதன்பின் ரதவீதியை சுற்றி வந்து சிவன் கோவிலில் திருக்கல்யாணம் நடைபெற்றது.



அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுத் தலைவர் மற்றும் சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர்.தொல்.திருமாவளவன் தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி. அரியலூர் சட்டமன்ற உறுப்பினர்கு.சின்னப்பா அவர்கள் மற்றும் பலர் உள்ளனர்.

# துருக்கி நாட்டில் இறந்த தமிழக பொறியாளர் உடலை, தமிழகம் கொண்டு வர வேண்டும்!

## வெளி விவகாரத்துறை அமைச்சருக்கு பி.எல்.ஏ.ஜெகநாத் மிஸ்ரா வலியுறுத்தல்!!

**கம்பம், அக். 29**

தேனி மாவட்டம் கம்பத்தில் நமது மக்கள் முன்னேற்ற கழகத்தின் நிறுவனத் தலைவர் பி.எல்.ஏ. ஜெகநாத் மிஸ்ரா செய்தியாளர்கள் சந்திப்புக்கு பின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

சென்னை திருவான்மியூர் பகுதியைச் சேர்ந்தவர் ஆசிரியர் கணபதி இவரது மகன்சிவக்குமார் மும்பையில் உள்ள தனியார்கப்பல் கம்பெனியில் முதன்மை பொறியாளராக பணியாற்றி வந்தார். கடந்த நான்கு ஆண்டுகளாக பணியாற்றி வந்த நிலையில் கடந்த 20 ம் தேதி தீபாவளிக்கு இவரது மனைவி லீனாபிரியாவுக்கும்,



இவரது அம்மா மற்றும் உறவினர்களுக்கும் செல்போனில் தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பின்னர் கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பு சிவக்குமாரின் உறவினர்கள் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு செல்போனில் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் இறந்து விட்டதாக தகவல்தெரிவித்துள்ளனர். தனியார் கப்பல் கம்பெனியில் பணிக்கு சேர்வதற்கு முன்பு உடல் தகுதி அடிப்படையில் தான் சேர்க்கப்படுவார்கள்.

அப்படி உடல் தகுதி பெற்ற சிவக்குமார் திடீரென்று இறப்பதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை.

ஆகவே இது குறித்து மத்திய அரசு உரிய விசாரணை நடத்த வேண்டும். மேலும் இறந்தவர் உடலை சென்னைக்கு கொண்டு வர வெளிவகாரத்துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

# தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் மூலம் ஊட்டியில் சூரிய சக்தி மின் திட்டம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு!



**ஊட்டி, அக். 29**

தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் மூலம் வீடுகளில் சூரிய சக்தி மின் திட்டம் அமைப்பது குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் மூலம் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி இந்திய அமைச்சகத்தின் சார்பில் தற்போது வீடுகளில் சூரிய மின் சக்தி திட்டம் அறிமுகம் செய்யப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் பொதுமக்கள் தங்களது வீடுகள், நிறுவனங்களில் இந்த சூரியமின் சக்தி மின் திட்டம் மூலம் மின் உற்பத்தி செய்து பயன் அடையலாம். இத்திட்டம் நாடு முழுவதும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக தமிழ்நாட்டிலும் இத்திட்டம் தற்போது தமிழ்நாடு மின் மின் பகிர்மான கழகம் மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு இத்திட்டத்தை ஊக்குவித்து வருகின்றனர். இந்நிலையில், இத்திட்டம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படும் வகையில்,நீலகிரிமின்பகிர்மான வட்டம் சார்பில் ஊட்டியில் உள்ள மின் வாரிய அலுவலகத்தில் நடந்தது. நிகழ்ச்சியில், நீலகிரி மாவட்ட மின் பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர் தலைமை சாந்தநாயகி வகித்தார். செயற்பொறியாளர் சிவக்குமார் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில், இத்திட்டம் குறித்து அதிகாரிகள் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். மேலும், இத்திட்டம் எவ்வாறு செயல்படுத்தப்படுகிறது, இந்த திட்டம் மூலம் பொதுமக்களுக்கு ஏற்படும் பயன்கள் மற்றும் வருவாய் ஆகியவை குறித்து அதிகாரிகள் உதவி செய் பொறியாளர் சந்திப் உதவி மின் பொறியாளர்கள் பிரியா மோகன்ராஜ் சிவா விரிவாக எடுத்துரைத்தனர். மேலும்,

இத்திட்டத்திற்கு வங்கிகள் மூலம் வழங்கப்படும் கடன்கள் குறித்தும் மற்றும் மானியம் குறித்து விளக்கி கூறப்பட்டது. இதன்படி, ஒரு கிலோ வாட் மின் உற்பத்தி செய்ய ரூ.30 ஆயிரம் வரை மானியகள் வழங்கப்படுகிறது. 2 கிலோ வாட் மின் உற்பத்தி செய்ய ரூ.60 ஆயிரம் வழங்கப்படுகிறது. 3 கிலோ வாட் மற்றும் அதற்கு மேல் உற்பத்தி செய்ய ரூ.78 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது. மேலும், இந்த திட்டத்திற்கு வங்கிகள் மூலம் உடனடியாக கடன் உதவிகளும் வழங்கப்படுகிறது. மேலும், இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மானியம் நுகர்வோரின் வங்கிக் கணக்கில் நேரடியாக சூரிய திட்ட பணிகள் முடிவுற்ற 7 நாட்களில் இருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படும். ஒரு கிலோ வாட் சூரிய தகடு, ஒரு நாளில் 4 முதல் 5 யூனிட்டுகள் வரை உற்பத்தி செய்யும். நுகர்வோர் செய்யும் முதலீடு குறுகிய காலத்தில் திரும்ப பெறலாம் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த திட்டத்தில் சேர இணையதளம் மூலமாக விண்ணப்பிக்கலாம். registration.pmsuryaghar.gov.in, www.pmsuryaghar.gov.in, www.solarrooftop.govin. என்ற இணைய தளம் மூலம் விண்ணப்பித்து பயன்பெறலாம்.

மேலும், ஒரு கிலோ வாட் சூரிய மின் தகடு பொருத்துவதால், இரு மாதங்களுக்கான மின் கட்டணத்தில் கிடைக்கம் சேமிப்பு விவரங்கள் குறித்து 100க்கும் மேற்பட்ட முகவர்களுக்கு பொதுமக்கள் தெரிவிக்கப்பட்டது.

# தூத்துக்குடி மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம்!

**தூத்துக்குடி அக்.29**

தூத்துக்குடி மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தாடெர்பாக மாவட்ட தேர்தல் அலுவலர் ஃ மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத் தலைமையில் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது.

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் இந்திய தேர்தல் ஆணையம் வழங்கிய அறிவுரைகளின் படி, தூத்துக்குடி மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2025 மேற்கொண்டிட அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் மற்றும் வாக்காளர் பதிவு அலுவலர்கள்உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் கலந்தாய்வுகூட்டம்மாவட்ட தேர்தல் அலுவலர்ஃமாவட்ட ஆட்சியர் க. இளம்பகவத் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ஆ.இரவிச்ச ந்திரன், தூத்துக்குடி மாநகராட்சி ஆணையாளர் சி.ப்ரியங்கா, கோவில்பட்டி சார் ஆட்சியர் ஹிமான்ஷீ மங்கள், மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



மதுரை அருகே உள்ள அழகர் மலை உச்சியில் உள்ள ஆறாவது படைவீடு எனும் சோலைமலை முருகன் கோவிலில் திருக்கல்யாணத்தை முன்னிட்டு அதி.மு.க. முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜீ.த.னது குடும்பத்துடன் வந்து சுவாமி தரிசனம் செய்தார்.

# திருப்பத்தூரில் பட்டு வளர்ச்சி துறை இயக்குனர் சாந்தி நேரில் ஆய்வு!



**திருப்பத்தூர் அக்29**

திருப்பத்தூர் மாவட்டம், கசிநாயக்கன்பட்டி பகுதியில் இயங்கு வந்த மத்திய பட்டு வாரியத்தின் தேசிய பட்டு முட்டை உற்பத்தி மையத்தை தமிழ்நாடு பட்டு வளர்ச்சி த் துறையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த மையத்தை பட்டு வளர்ச்சி துறை இயக்குனர் சாந்தி துவக்கி வைத்தார்.

பின்னர் தமிழக விவசாயிகளிடம் வெண்பட்டு முட்டை தொகுதியில் நுகர்வு அதிகரிக்கும் பொருட்டு பல்வேறு பகுதிகளுக்கு சென்று ஆய்வு மேற்கொண்டார். பின்னர் கட்டேரி பகுதியில் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக பட்டு வளர்ப்பில் ஈடுபட்டு வரும் விவசாயி ரமேஷ் பண்ணையைபார்வையிட்டு தமிழக அரசு கொண்டு வந்துள்ள திட்டங்களை எடுத்துரைத்தார். மேலும் அவருக்கு பண்ணை அமைப்பதற்கான மானியத் தொகை வழங்கவும் பரிந்துரைத்தார். அப்போது விவசாயி தெரிவிக்கையில் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக பட்டு பூச்சி வளர்ப்பில் ஈடுபட்டு வருவதும் தனக்கு லாபகரமான உதவியாகவும் இருப்பதாகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

அவருக்கு நற்சான்றிதழ் வழங்கவும் இயக்குனர் பரிந்துரைத்தார். மேலும் வெண்பட்டு மஞ்சல் பட்டு (கலப்பினபட்டு) வளர்க்கவும் விவசாயிகளிடம் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வில் மத்திய பட்டு வாரிய முட்டை உற்பத்தி மையத்தின் இயக்குனர் மனத்திர மூர்த்தி, விஞ்ஞானிகள். அபிலேஷ் செல்வராஜ், சேலம் பட்டு வளர்ச்சித் துறை இணை இயக்குனர்.

சந்திரசேகர் விதை ஒருங்கிணைப்பு துணை இயக்குனர் பாலச்சந்திரன், திருவண்ணாமலை உதவி இயக்குனர் பழனிச்சாமி, வாணியம்பாடி உதவி இயக்குனர் திலகவதி ஆய்வாளர் ராஜ்குமார்மற்றும்துறை சார்ந்த அலுவலர்களுக்கு உடன் இருந்தனர்.

# தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியின் நிகர லாபம் ரூ.318 கோடியாக உயர்வு!

## நிர்வாக அதிகாரி தகவல்!!

**தூத்துக்குடி அக்.29**

தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியின் நிகர லாபம் 4.95மூ அதிகரித்து ரூ.303 கோடியிலிருந்து ரூ.318 கோடியாக உயர்ந்துள்ளது. தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியானது தூத்துக்குடியை தலைமையிடமாகக் கொண்டு, 1921 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, சிறப்பாக செயல்பட்டு வரும் பாரம்பரியமிக்க தனியார் துறை வங்கியாகும். வங்கியானது தனது வரலாற்றில் தொடர்ந்து 103 வருடங்களாக இலாபம் ஈட்டி வருவது குறிப்பிடத்தக்கது. வங்கியானது 600 கிளைகள் மற்றும் 12 மண்டல அலுவலகங்கள் ஆகியவற்றின் மூலம் நாட்டின் 17 மாநிலங்கள், 4 யூனியன் பிரதேசங்களில் தனது விரிவாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு ஏறத்தாழ 5.3 மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றி வருகிறது. தூத்துக்குடியில் நடைபெற்ற இயக்குனர் குழு கூட்டத்தில் 202526 இரண்டாம் காலாண்டு மற்றும் அரையாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள் இறுதி செய்யப்பட்டது. வங்கியின்நிர்வாக இயக்குனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி சலீ எஸ் நாயர் அவர்கள் தணிக்கை செய்யப்படாத இரண்டாம் காலாண்டிற்கான நிதிநிலை அறிக்கையினை வெளியிட்டார். இந்த நிகழ்ச்சியில் மூத்த அதிகாரிகள் பங்கு கொண்டனர். பின்னர் வங்கியின் நிர்வாக இயக்குனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி சலீ எஸ் நாயர் விளக்கியதாவது: எங்கள் 2026 நிதியாண்டின் இரண்டாம் காலாண்டில் இது வரை இல்லாத அளவுக்கு அதிகபட்சகாலாண்டு நிகர லாபத்தை நாங்கள் அடைந்துள்ளோம், இது எங்களது கடன் மற்றும் வைப்பு வணிகங்களின் தொடர்ச்சியான வளர்ச்சியால் அடையப்பட்டுள்ளது. கிளைகளை விரிவுபடுத்துவதிலும், வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்துவதிலும் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். இந்த காலாண்டில், முக்கிய நகரங்களில் 9 புதிய கிளைகளை திறந்து, எங்கள் விநியோக வலையமைப்பை மேலும் வலுப்படுத்தியுள்ளோம். வங்கியின் டிஜிட்டல் மாற்றத்திற்காகவும், வாடிக்கையாளர் சேவையை மேம்படுத்த செயல்பாட்டுத் திறனை அதிகரிப்பதற்காகவும் பல திட்டமுறைகூட்டாண்மை களில் நாங்கள் ஆரம்பித்துள்ளோம். இவை போன்ற நடவடிக்கைகள், பொறுப்பான கடன் வழங்கல் மற்றும் முறையான சளைம அயயெபநஅநவெ செயல்பாடுகளில் கூடுதல் கவனம் ஆகியவை, எதிர் காலங்களில் நிலையான மற்றும் லாபகரமான வளர்ச்சிக்கான பாதையை அமைக்க உதவும் என்று நாங்கள் நம்புகிறோம். அனைத்து அடிப்படை அளவீடுகளிலும் வங்கி தொடர்ந்து வலுவான செயல்திறனை வெளிப்படுத்தி வருகிறது. நிகர வட்டி வருமானம் ரூ.597 கோடியாக உள்ளது. (முந்தைய ஆண்டின் இரண்டாம் காலாண்டில் ரூ.596 கோடியாக இருந்தது.) இது 0.17மூ வளர்ச்சியாகும். நிகரமதிப்பு (நேவறழசவா) ரூ.9,444 கோடியாக உயர்ந்துள்ளது. (முந்தைய ஆண்டின் இரண்டாம் காலாண்டில் ரூ.8,430 கோடியாக இருந்தது) இது ரூ.1014 கோடி உயர்ந்து 12.03மூ வளர்ச்சி அடைந்துள்ளது. புதிய கிளை திறப்பு: வங்கியானது இந்த காலாண்டில் 9 புதிய கிளைகளை துவக்கியு ள்ளது. வங்கி ஆந்திரப் பிரதேசத்தின் தெனாலி, மங்களகிரி மற்றும் கேரளாவின் விழிஞ்சம் ஆகிய இடங்களில் மூன்று புதிய கிளைகளை திறந்து வைத்துள்ளது. கேரளாவில் உள்ள விழிஞ்சம் கிளை திறப்பு, வங்கியின் 600வது கிளையாகும் என்பது ஒரு முக்கியமான மைல்கல் ஆகும். புதிய முயற்சிகள் ஃ மாற்றங்கள்: இந்த காலாண்டில், வங்கி வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்தவும், செயல்திறனை வலுப்படுத்தவும், சேவை அளிப்புகளை விரிவுபடுத்தவும் நோக்கி 2 துரிதமான முயற்சிகளையும் தொழில்நுட்ப சார்ந்த முன்னேற்றங்க ளையும் மேற்கொண்டுள்ளது. இந்த முயற்சிகள் வங்கியின் புதுமை, டிஜிட்டல் மாற்றம் மற்றும் வாடிக்கையாளர் மையப்படுத்தப்பட்ட அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகின்றன. க்கான தொடர்ந்த வங்கியின் பங்குதாரர்களுக்கு மதிப்பை வழங்குவதில் வங்கி தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறது. இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH

உள்ளாட்சி அரசு





## போச்சம்பள்ளி அருகே

# கிராமத்திற்கு செல்லும் சாலையை தனி நபர்கள் தடுப்பதாக கிராம மக்கள் சாலை மறியல்!

**கிருஷ்ணகிரி,அக்** 29

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அடுத்த வளசகவுண்டனூர் ஊராட்சி தே மோட்டூர் கிராமத்தில் சுமார் 300க்கும் மேற்பட்ட கிராம மக்கள் வசித்து வருகின்றனர். இந்த கிராம மக்கள் கடந்த 80 ஆண்டுகளுக்கும் மேலாக பயன்படுத்தி வந்த மண் சாலையை சிமெண்ட் சாலையாக மாற்றி தர கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் கோரிக்கையின் பேரில் சாலை அமைக்கும் பணிகள் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்று உள்ளது அப்பொழுது அந்த இடம் தனிநபர் ஒருவரது பட்டா நிலம் எனக் கூறி தகராறு ஏற்பட்ட நிலையில் இதுகுறித்து கிராம மக்கள் மற்றும் தனிநபர் இருவரும் மாவட்ட ஆட்சியர் மற்றும்நீதிமன்றத்தில்வழக்கு தொடர்ந்து விசாரணையில் இருந்து வந்தது விசாரணை மேற்கொண்டு கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் தினேஷ்குமார் மற்றும் வருவாய் துறை அதிகாரிகள்இந்த பகுதியில்சாலை அமைக்க 2025 26 ஆம் ஆண்டு ஒன்றிய பொது நிதியின் கீழ் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி செய்ய 2, லட்சத்து 850 ரூபாய் மதிப்பில் டெண்டர் விடப்பட்டது. இதன் பெயரின் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஒப்பந்ததாரர் சாலை அமைக்க வந்த நிலையில் இதற்கு பட்டாதாரர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்இது குறித்து ஆத்திரம் அடைந்த கிராம மக்கள் பள்ளி குழந்தைகளுடன் இன்று சந்தூர் போச்சம்பள்ளி சாலையில் 200க்கும் சாலை மறியலில் ஈடுபட்டனர். இது குறித்த தகவல் அறிந்து வந்த போச்சம்பள்ளி போலீசார்சமாதான பேச்சு வார்த்தை நடத்தி வருகின்றனர்.

இது குறித்து கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் தினேஷ்குமார் அவர்களை தொடர்பு கொண்டுகேட்டபொழுது இந்தப் பாதையானது நிலவில் பாதையில் உள்ளது இது குறித்து விசாரணை மேற்கொண்டு சாலை அமைக்க உத்தரவு பிறப்பித்துள்ளேன் போலீஸ் பாதுகாப்புடன் சாலை அமைக்கப்படும் என்று தகவல் தெரிவித்தார்.

## மருத்துவமனை வளாகத்தில் புகுந்த மழைநீர்:

# தேங்கி வருவதை தடுக்கும் வகையில் வடிகால் அமைக்க 9 வது வார்டு சபா கூட்டத்தில் தீர்மானம்!

**வந்தவாசி,அக்** 29

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி டவுன் 9வது வார்டில் நகராட்சி சார்பில் வார்டு சபா கூட்டம் நகர மன்ற உறுப்பினர் நாகூர் மீரான் தலைமையில் நடை



பெற்றது காயதே மில்லத் பாய் வியாபாரி சங்க தலைவர் ராஜா பாஷா நகராட்சி கட்டிட ஆய்வாளர் ஹேமலதா அமிது ஆகியோர் முன்னிலை வகித்தனர் காயிதே மில்லத் பாய் வியாபாரி சங்க செயலாளர் சாதிக் பாஷா அனைவரையும் வரவேற்று பேசினார். நகராட்சி ஆணையாளர் சோனியா நகராட்சி துணை சேர்மன் அன்னை க. சீனிவாசன் ஆகியோர் 9வது வார்டு பகுதியில் உள்ள குறைகளை கேட்டறிந்து பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெற்றுக் கொண்டு அரசு விதிகளுக்கு உட்பட்டு மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தனர் இந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் 9வது வார்டு பகுதியில் உள்ள அரசு மருத்துவமனைக்கு இரண்டு புதிய கட்டிடங்கள் கட்ட ரூபாய் 11 கோடி நிதியைப் பெற்றுத் தந்தும் அந்த கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டில் கொண்டு வந்த ஆரணி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தரணிவேந்தன் அவர்களுக்கும் சட்டமன்ற உறுப்பினர் எஸ். அம்பேத்குமார் அவர்களுக்கும் நன்றி தெரிவித்தும் மியான்மா காதர்ஷா தெருவில் கழிவுநீர் கால்வாய் சாலை வசதி உள்ளிட்டவளை சட்டமன்ற உறுப்பினர் நிதியில் செயல்படுத்திய சட்டமன்ற உறுப்பினரை எஸ். அம்பேத்குமார் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது மேலும் 9வது வார்டு பகுதியில் கழிவுநீர் கால்வாய் குடிநீர் குழாய் இல்லாத பகுதியில் குடிநீர் குழாய் அமைத்து தரவேண்டும் என்றும் மேலும் குடிநீர் தொட்டியை சீரமைத்து தரவேண்டும் என்றும் 9வது வார்டில் பல ஆண்டுகளாக அரசு இடத்தில் வசித்து வருபவர்களுக்கு சொத்து வரி குடிநீர் வசதி உள்ளீட்டவைகளை செய்து தர வேண்டும் என்றும் இவை உள்பட பல்வேறு கோரிக்கை தீர்மானங்கள் நிறைவே ற்றப்பட்டது வாடு சபா கூட்டத்தில் அப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



## சூளகிரி அருகே

# வீட்டை இடித்து ஜாதி ரீதியாக குடியிருக்க விடாமல் தொடர்ந்து தொல்லைக் கொடுத்து வரும் நபர்கள்!

### பாதிக்கப்பட்டவர்கள் மாவட்ட ஆட்சியரை சந்தித்து புகார்!!

**சூளகிரி, அக்** 29

கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி அருகே உள்ள ஆலசாதனப்பள்ளி கிராமத்தை சேர்ந்தவர் கூலித் தொழிலாளி

ஸ்ரீபுரிமுனியப்பா இவர் தனது மனைவி மற்றும் மகன் மகளுடன் வசித்து வருகிறார்.

இவருடைய மகன்களான அம்ரேஷ், நாகேஷ் ஆகியோர் பெங்களூரில் வேலைப்பார்த்து வருவதால், ஆலசாதனப்பள்ளி கிராமத்தைசேர்ந்தஆதிக்க சாதியை சேர்ந்த பிரகாஷ், நாரயணசாமி உள்ளிட்ட பலர் எங்கள் கிராமத்தில் நடக்கும் கோவில் திருவிழாக்கள் உள்ளிட்ட எந்த ஒரு சுப, துக்க நிகழ்ச்சிகளிலும் கலந்துக் கொள்ளக்கூடாது,

கோவில்களுக்கு சாமி குப்பிட வரக்கூடது, எங்கள் கிராமத்தில் நீங்கள் குடியிருக்க தகுதியற்றவர்களாக உள்ளீர்கள் என கூறி சாதி ரீதியாக கொடுமை கொடுமை படுத்தி வருவதாகவும் குடியிருந்த வீட்டை இடிப்பது போன்ற தொல்லைகளை தொடர்ந்து கொடுத்து வருவதால் பாதுகாப்பு கேட்டு சூளகிரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை, நாங்கள் தாழ்த்தப்பட்ட இனத்தை சேர்த்தவர்கள் என்பதால் காவல் துறையினர் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் இருப்பதாக கூறி பாதிக்கப்பட்ட ஸ்ரீ புரி முனியப்பாவின் மனைவி தெய்வம்மா தனது மகன்களுடன் வந்து கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் தினேஷ்குமாரிடம் குடியிருந்து வரும் வீட்டை இடித்து ஜாதி ரீதியாக குடியிருக்க விடாமல் தொடர்ந்து தொல்லைக் கொடுத்து வரும் நபர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்து அவர்கள் மீது துறைவாரியாக நடவடிக்கைஎடுத்துஎங்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்குமாறு மனுவினை கொடுத்தார்.

மேலும் இது குறித்து கூறிய தெய்வம்மாவின் மகன் நாகேஷ் கடந்த பல தலைமுறைகளாக ஆலசாதனப்பள்ளி கிராமத்தில் குடியிருந்து வருகிறோம் மிகவும் கஷ்டப்பட்டு படித்து பெங்களூரில் வேலைப்பார்த்து வருவதால் ஆலசானப்பள்ளி கிராமத்தை சேர்த்தவர்களுக்கு பிடிக்கவில்லை, நாங்கள் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை சேர்ந்தவராக இருப்பதால் எங்களை நிம்மதியாக வாழ விடுவது இல்லை,

வயதான பெற்றோர்களை மிரட்டி வருவதோடு இந்த கிராமத்தில் இருக்கக்கூடாது என எதிர்ப்பு தெரிவித்து வீட்டின் காம்பௌண்ட சுவரை இடித்து மட்டுமின்றி வீட்டை இடித்து ரகளையில் ஈடுப்பட்டு வருவதோடு சாலையின் குறுக்கே கனரக வாகனங்களை கொண்டு போக்குவரத்துக்கு இடையூறு செய்து எங்களை எங்கேயும் செல் முடியாத அளவுக்கு கொடுமைப்படுத்தி வருகின்றனர்,

மேலும் ஆலசானப்பள்ளி கிராமத்தில் நடக்கும் கோவில் திருவிழா உள்ளிட்ட எந்த நிகழ்ச்சிகளிலும் கலந்துக் கொள்ளக் கூடாது என மிரட்டி வருகின்றனர்.

இது தொடர்பாக சம்மந்தப்பட்ட நபர்கள் மீது உரிய நடவடிக்கை வழியுறுத்தி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தும் எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை நாங்கள் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை சேர்ந்தவர் என்பதால் காவல் துறையினர் நடவடிக்கை எடுக்க வில்லை இதனால் எங்களுக்கு உரிய பாதுகாப்பு அளித்து ஆதிக்க ஜாதியினர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சியர் முன் வர வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.




# சிதம்பரம் சென்ட்ரல் ரோட்டரி சங்கம் சார்பில் போக்சோ சட்ட விழிப்புணர்வு!

**சிதம்பரம், அக்** 29

சிதம்பரம் சென்ட்ரல் ரோட்டரி சங்கத்தின் சார்பில் ஷெம்போர்டு சிபிஎஸ்சிபள்ளியில்போக்சோ சட்டத்தின் மூலம் பெண் குழந்தைகளுக்கான பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. சங்கத்தின் தலைவர் ஹரி கிருஷ்ணன் தலைமையில் சாசன தலைவர் முகமது யாசின், சாசன செயலாளர் தீபக்குமார் மற்றும் மூத்த உறுப்பினர்கள் சுப்பையா, கோவிந்தராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பள்ளியின் முதல்வர் லதா வரவேற்புரை நிகழ்த்தினார். கடலூர் மாவட்ட சைபர் கிரைம் ஆய்வாளர் கவிதா பெரியநாயகம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, மாணவிகளுக்கு போக்சோ சட்டத்தை பற்றியும், சமுதாயத்தில் பெண் குழந்தைகளின் பாதுகாப்பு குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

மண்டல துணை ஆளுநர் புகழேந்தி வாழ்த்துரை வழங்கினார். சங்கத்தின் உறுப்பினர்கள் சிவக்குமார், பாவிக் பட்டேல் சிறப்பு திட்டங்களுக்கான மண்டல பொறுப்பாளர் யாசின் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பள்ளியின் ஆசிரியர் மற்றும் சங்கத்தின் உறுப்பினர்கள் இணைந்து செய்திருந்தனர்.

முடிவில் செயலாளர் புகழேந்தி நன்றி கூறினார்.

# கன்றுக்குட்டி திருடியவர் கைது!

**சிவகாசி அக்.** 29

நாரணாபுரம் ரோடு முருகன் காலனியை சேர்ந்தவர் பால முருகன் 32. இவரது வீட்டின் முன்பு தனது கன்று குட்டி, பன்றியை கட்டி வைத்திருந்தார். கன்று குட்டி ஏற்க னவே திருடு போன நிலையில் போஸ் காலனியைச் சேர்ந்த ராஜ்குமார் 43, பன் றியை தூக்கிச் சென்ற போது அப்பகுதியினர் பிடித்து கிழக்கு போலீஸ் ஸ்டே ஷனில் ஒப்படைத்தனர். விசாரனையில் ஏற்கனவே கன்று குட்டியையும் திருடி யது தெரியவந்தது.போலீசார் அவரை கைது செய்தனர்.



வேலூர் மாநகராட்சி, கன்சால்பேட்டையில் தொடர் மழையால் தேங்கியுள்ள மழைநீரை மின்மோட்டார் மூலம் வெளியேற்றபடுவதை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே. இரா. சுப்புலெட்சுமி, பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாநகராட்சி ஆணையாளர் இரா.லெட்சுமணன், வேலூர் வட்டாட்சியர் திரு.வடிவேல் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

# விழுப்புரத்தில் நாம் தமிழர் கட்சி சார்பில் மாவட்ட ஆட்சியரிடம் புகார் மனு!



**விழுப்புரம் அக்.** 29

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நாம் தமிழர் கட்சி சார்பில் மாநில ஒருங்கிணைப்பாளர்சர்புதீன் மற்றும் மாவட்டத் தலைவர் கார்த்திகேயன் இவர்களின் தலைமையில் விழுப்புரம் மாவட்டம் கண்டாச்சிபுரம்

வட்டம் அரகண்டநல்லூர் கிராம காமராஜர் சாலையில் உள்ள கிராம சர்வே 176 பி/4 ல் 120 ஆண்டுகளுக்கும் மேலாக வீடு கட்டி குடியிருந்து வரும் ஏழை எளிய மக்களுக்கு குடியிருப்பு மனை பட்டா வழங்கி கோரி மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தனர் உடன் மாநில வீரத் தமிழர் முன்னணி ஒருங்கிணைப்பாளர் கள்ளக்குறிச்சி பிரபாகரன், மாநில ஒருங்கிணைப்பாளர் உளுந்தூர்பேட்டை தேசிங்கு ,மாநில இளைஞரணி பாசறை செயலாளர்கள்ளக்குறிச்சி ரமேஷ் பழனியப்பன் ,

மாநில ஒருங்கிணைப்பாளர் ரிஷிவந்தியம் ,கவிதாஅய்யனார்மாநில ஒருங்கிணைப்பாளர் திருக்கோவிலூர் ராமச்சந்திரன், இளைஞர் அணி பாசறை மாநில ஒருங்கிணைப்பாளர் கார்த்திகேயன் உள்ளிட்ட நாம் தமிழர் கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# மேலமையூர் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்!

### குத்து விளக்கேற்றி துவக்கி வைத்த ஊராட்சி மன்ற தலைவர்!!

**செங்கல்பட்டு, அக்.** 29

செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்குளத்தூர் ஒன்றியம் மேலமையூர் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நேற்று நடைபெற்றது. முகாமை ஊராட்சி மன்ற தலைவர் ஹெலன் சிந்தியா சரவணன் கலந்து கொண்டு குத்து விளக்கேற்றி துவக்கி வைத்து நிகழ்ச்சியை தொடங்கி வைத்து பொது மக்களிடம் குறைகளை கேட்டு அறிந்து பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்த முகாமில் பல்வேறு துறை சார்ந்த அதிகாரிகளிடம் பொதுமக்கள் கோரிக்கை மனுக்களை அளித்தனர். இந்நிகழ்ச்சியில் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சந்திரா, தனி வட்டாட்சியர் (ச.பா.தி) தனலட்சுமி, கிராம நிர்வாகஅலுவலர்சிவசங்கரி, துணைத் தலைவர் நீலா, திமுக கிளை செயலாளர் வார்டு உறுப்பினர் கதிரேசன், ஊராட்சி செயலர் இராமானுஜம், அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்குளத்தூர் ஒன்றியம் மேலமையூர் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நேற்று நடைபெற்றது.

# பலமுறை கோரிக்கை வைத்தும் கண்டுகொள்ளாத நகராட்சி நிர்வாகம்; தானே களத்தில் இறங்கி தூய்மை பணி செய்த காங்கிரசு கமிட்டி தலைவர்!



**திருப்பத்தூர் அக்.**29

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் நகராட்சி 16 வது வார்டு பகுதியில் 100க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில் 16 வது வார்டு பகுதியில் தேங்கி கிடக்கும் குப்பைகள் மற்றும் கழிவுநீர் கால்வாய்களை தூர் வார வேண்டும், புதுப்பே ட்டை ரோடு முதல் போலிஷ் குடியிருப்பு வரை உள்ள 200 மீட்டர் கழிவுநீர் கால்வாயை சீரமைக்க வேண்டும் என 16வது வார்டு மக்கள் மற்றும் கவுன்சிலர் அபிராமி மற்றும் நகர காங்கிரஸ் கமிட்டி தலைவர் பரத் ஆகியோர் தொடர்ந்து நகராட்சி நிர்வாகத்திற்கு கோரிக்கைகள் வைத்தனர். ஆனால்நகராட்சிநிர்வாகம் தங்களது கோரிக்கைகள் மீது எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என கூறி நேற்று கவுன்சிலர் அபிராமி மற்றும் நகர காங்கிரஸ் கமிட்டி தலைவர் பரத் ஆகியோர் தங்களது சொந்த முயற்சியில் 20 பணி ஆட்களை வைத்து தூய்மை செய்யும் பணியில் ஈடுபட்டனர். இனியாவது நகராட்சி நிர்வாகம் 16 வது வார்டு மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்பது அப்பகுதி மக்களின் எதிர்பார்ப்பு ஆகும்.



# சங்ககிரி சோமேஸ்வரர் கோவிலில் திருக்கல்யாணம்!

சங்ககிரி, அக். 30–

சங்ககிரி மலை அடிவாரத்தில் உள்ள சோமேஸ்வரர் கோயிலில் கந்த சஷ்டி விழாவை முன்னிட்டு திருக்கல்யாண உற்சவம் நடைபெற்றது. சோமேஸ்வரர் கோயில் வளாகத்தில் உள்ள முருகன் சன்னதியில் கடந்த புதன் கிழமை கந்த சஷ்டி பூஜை துவங்கியது.

அன்று முதல் தினமும் வள்ளி, தெய்வானை, முருகன் ஆகிய மூலவர் சிலைகளுக்கு சந்தனம், மஞ்சள், பால், தயிர், பன்னீர் போன்ற பலவித திரவியங்களால் அபிஷேகங்கள் நடைபெற்று, மலர் மாலை மற்றும் வெட்டி வேர் மாலைகளால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு மகாதீபாராதனை நடைபெற்றது. கந்த சஷ்டி விழா அன்று மாலையில் கோயில் வளாகத்திற்குள் மாலைகள் மற்றும் மின் விளக்குகளால்அலங்காரம்செய்யப்பட்ட ரதத்தில் ரதோற்சவமும் நடைபெற்றது. நேற்று மாலையில் வள்ளி, தெய்வானை சமேதமாக முருகனுக்கு திருக்கல்யாண உற்சவம் நடைபெற்றது.

திருமண அலங்காரத்தில் வள்ளி தெய்வானை சமேதமாக காட்சியளித்த முருகனுக்கு மகா தீபாரதனை நடைபெற்றது. இந்த விழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

## ஜார்க்கண்டில் பரிதாபம்:
# மாவோயிஸ்டுகள் பதுக்கியிருந்த குண்டு வெடித்து சிறுமி சாவு!

ராஞ்சி, அக்.30

ஜார்க்கண்ட் மாநில வனப் பகுதியில் மாவோயிஸ்டு தீவிரவாதிகள் மறைத்து வைத்த குண்டு வெடித்து 10 வயது பழங்குடியின சிறுமி உயிரிழந்தார்.

இது தொடர்பாக காவல் துறையினர் கூறியதாவது: மேற்கு சிங்பூம் மாவட்ட வனப் பகுதியில் பாதுகாப்புப் படையினரைக் குறிவைத்து மாவோயிஸ்ட் அமைப்பினர் வெடிகுண்டை மறைத்து வைத்துள்ளனர்.

இந்நிலையில், அந்தப் பகுதியில் பழங்குடியின சிறுமி ஒருவர் நேற்று அதிகாலை நேரத்தில் இலைகளை சேகரிப்பதற்காகச் சென்றுள்ளார். அவர் நடந்து சென்ற போது, மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டை அவர் தெரியாமல் மிதித்ததால் அது வெடித்துச் சிதறியது. இதில் அந்தச் சிறுமி இரு கால்களும் சிதைந்து உயிரிழந்தார் இவ்வாறு கூறியுள்ளனர்.

இது தொடர்பாக வழக்குப் பதிவு செய்துள்ள காவல் துறையினர் அப்பகுதியில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர். மாவோயிஸ்டுகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் நிதியுதவியை சிறுமியின் குடும்பத்துக்குப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

சத்தீஸ்கர் மாநிலத்தில் நக்ஸல்கள் அதிகமுள்ள சுக்மா மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினரைக் குறிவைத்து நக்ஸல் தீவிரவாதிகள் புதைத்து வைத்திருந்த 40 கிலோ எடையுள்ள வெடிகுண்டை காவல்துறையினர் கண்டுபிடித்தனர். இந்தக் குண்டு வெடித்திருந்தால் மிகப்பெரிய அளவில் சேதம் ஏற்பட்டிருக்கும் என்று காவல் துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டது.



# துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணனுக்கு சொந்த ஊரான திருப்பூரில் உற்சாக வரவேற்பு!

திருப்பூர்,அக்.30–

நாட்டின் துணை ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் முதல் முறையாக தனது சொந்த ஊரான திருப்பூருக்கு துணை குடியரசுத் தலைவர் சி பி ராதாகிருஷ்ணன் வருகை தந்துள்ளார் திருப்பூர் ரயில் நிலையம் முன்பாக அமைந்துள்ள குமரன் நினைவகத்தில் தியாகி திருப்பூர்குமரனுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் பின்னர் மாநகராட்சி அருகே அமைந்துள்ள காந்தி சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பதவியேற்ற பின்னர் முதல் முறையாக திருப்பூர் வருகை தந்ததால் பாஜகவினர் மற்றும்பொதுமக்கள்திரளாகவரவேற்பு அளித்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் திருப்பூரில் இருந்து ஒருவர் இந்திய தேசத்தின் துணை குடியரசுத் தலைவராக பொறுப்பேற்று இருப்பது நம் ஊருக்கும் உலகிலே வாழ்கிற அனைத்து தமிழ் மக்களுக்கும் மகத்தான பெருமை அந்தப் பெருமையை தந்த நரேந்திர மோடிக்கு நம்ம ஊரின் சார்பில் மகத்தான நன்றி என தெரிவித்தார்.



# அரசு மற்றும் நிதி உதவி பெறும் பள்ளி மாணவர்கள் மாவட்ட அலுவலக கலை நிகழ்ச்சிகள்!
## மீனாட்சி மகளிர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது!!

திருப்பத்தூர் அக்.30

திருப்பத்தூர் மாவட்டம் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கிடையே கலை நிகழ்ச்சி போட்டிகள் நடைபெற்றது 2022 ஆம் ஆண்டு முதல் இந்த நிகழ்ச்சியானது தமிழக முதல்வரால் தொடங்கி வைக்கப்பட்டது இதனை தொடர்ந்து பள்ளி மாணவர்கள் திருப்பத்தூர் மாவட்ட அளவில் உள்ள மாணவர்கள் இந்த கலை நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தங்களுடைய திறமைகளை வெளிப்படுத்தினார்கள் இதன் மூலம் பள்ளி மாணவ மாணவிகளுக்கு ஊக்குவிப்பாகவும் மற்றும் பரிசுகளும் வழங்கி தமிழக முதல்வர் அறிவித்துள்ளார் எனவே பல்வேறு மாணவர்கள் பல கலை நிகழ்ச்சிகள் இன்று மீனாட்சி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கலை நிகழ்ச்சி ஆனது நடைபெற்றது இதில் திருப்பத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த 28 அரசு பள்ளியைச் சேர்ந்த மாணவர்கள் மாணவிகள் தங்களுடைய திறமைகளை வெளிப்படுத்தி கலை நிகழ்ச்சிகள் கலந்து கொண்டனர் பரிசு பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும் இந்த நிகழ்ச்சியானது மாவட்டம் முதன்மை கல்வி அலுவலர் புண்ணியகோடி. திட்ட அலுவலர் உமா மகேஸ்வரி. திருப்பத்தூர் நகர மன்ற தலைவர் சங்கீதா வெங்கடேசன். திருப்பத்தூர் நகர மன்ற துணைத் தலைவர் ஏ ஆர் சபியுல்லா. நல்லாசிரியர் விருது பெற்ற இந்திரா மாணவ மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் மற்றும் பள்ளி ஆசிரியர்கள் அனைவரும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்புத்தினர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்

# மார்செல்லஸ் GIFT சிட்டி ஹப் 3 ஆண்டுகள் குளோபல் கம்பவுண்டர்ஸ் செயல்பாட்டை நிறைவு செய்கிறது"



MAR₹CELLUS

சென்னை,அக்.30

மார்செல்லஸ் முதலீட்டு மேலாளர்கள் மூன்று ஆண்டகளுக்கு முன்பு குளோபல் காம்பவுண்டர்ஸ் உத்தியை தெளிவான தொலைநோக்குடன் அறிமுகப்படுத்தினர்.

இந்த உத்தி இந்தியர்களுக்கு உலகளாவிய முன்னணி நிறுவனங்களில் முதலீடு செய்யும் வாய்ப்பை வழங்கியது. முன்னோடி GIFT City மையத்திலிருந்து இயக்கம் செய்யப்பட்டது. இந்த மூன்று ஆண்டுகளில், மார்செல்லஸ் பிரம்மாண்ட வெற்றியை பெற்று வருகிறது.PMS, AIF மற்றும் ஆலோசனை தளங்களில் மொத்த சொத்துக்கள் ₹300 கோடிக்கு சென்றுள்ளன.

உத்தி இந்தியர்களுக்கு வட அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆசியா பகுதிகளில் முதலீடு செய்ய உதவியது.

அக். 2022 முதல், இந்த உத்தி 27.30% வருமானத்தை (INR) உருவாக்கியுள்ளது.மார்செல்லஸ் தலைமைத்துவக் குழு தனது பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துள்ளது.அவர்கள் கூறியதாவது, இந்தியர்கள் உலகளாவிய வளர்ச்சியில் பங்கேற்க வேண்டும் என்பது கனவு என்று. GIFT City மையம் மற்றும் அதனால் ஏற்பட்ட ஒழுங்குமுறை சீர்திருத்தங்கள் முக்கிய பங்கு வகித்தவை. மூன்று ஆண்டுகள் நிறைவு கொண்ட விழாவில் ₹300 கோடி சொத்துகள் எட்டியுள்ளன.இந்தச் சாதனை PMS, AIF மற்றும் ஆலோசனை தளங்களில் சீராக வளர்ச்சியடைந்தது.மார்செல்லஸ்நன்றிதெரிவித்துக்கொண்டு முதலீட்டாளர்களுக்கு மகிழ்ச்சியளிக்கிறது.நிறுவனம் எதிர்காலத்திலும் பல வருடங்கள் சேவை செய்யும் பாக்கியத்தை எதிர்பார்க்கிறது.இந்த மைல்கல் மூன்று ஆண்டுகளின் பயணத்தின் வெற்றியைக் குறிக்கிறது.



# திருப்பத்தூரில் பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக மாவட்ட இளைஞர் சங்க பொதுக்குழு கூட்டம்!

திருப்பத்தூர் அக்.30

திருப்பத்தூர் பாட்டாளி மக்கள் கட்சி திருப்பத்தூர் மேற்கு மாவட்டம் சார்பாக மாவட்ட இளைஞர் சங்க பொதுக்குழு கூட்டம் தனியார் திருமண மண்டபத்தில் மாலை 5மணி அளவில் நடைபெற்றது

இளைஞர் அணி பொதுக்கூட்டத்தில் மாநில இளைஞரணி சங்க தலைவர் கணேஷ்குமார் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்

மேலும் திமுக ஆட்சியில் மாவட்ட செயலாளர் ஆக வேண்டும் என்றால் அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கே மீண்டும் வழங்கப்படும் ஆனால் பாட்டாளி மக்கள் கட்சியில் மட்டுமே இளைஞர்களுக்கு வாய்ப்பு அளிக்கப் பட்டு 80 சதவீதம் இளைஞர்களே மாவட்ட செயலாளராக உருவாக்கப் பட்டு இருக்கிறார்கள் என்ற பெருமையைக் கொண்டது பாட்டாளி மக்கள் கட்சி என பெருமிதமாக கூறினார் மேலும் மேலும் திமுக ஆட்சியில் கொடுத்து வாக்குறுதிகளை மக்களுக்கு நிறைவேற்றாமல் ஏமாற்றி வருகிறார்கள் என்பதை அன்புமணி ராமதாஸ் அனைவரிடம் சுட்டிக்காட்டி வருகிறார் என கூறினார்

இந்த நிகழ்ச்சி தலைமையானது டி கே ஆர் கிருஷ்ணன் மாவட்ட இளைஞரணி செயலாளர் மற்றும் திருப்பத்தூர் பாட்டாளி மக்கள் கட்சி மாவட்டச் செயலாளர் டி கே ராஜா மாநில இளைஞரணி சங்கத் தலைவர் கணேஷ் குமார் முன்னாள் எம் எல்ஏ மாவட்ட வன்னியர் சங்க தலைவர் ஆனந்தன்.மாவட்டதலைவர்குட்டிமணி. பொறியாளர் பொன்னுசாமி. மாவட்டத் துணைச்செயலாளர்ரமேஷ். நிர்மலாசீதாராமன். நாட்றம்பள்ளி முன்னாள் எம் எல்ஏ ஒன்றிய செயலாளர் மற்றும் இளைஞர்கள் செயலாளர்கள் மற்றும் பாட்டாளி மக்கள் கட்சியினர் இளைஞர்களின் பொதுக்கூட்டம் சிறப்பாக நடைபெற்றது

# தாட்கோ மூலம் முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார முன்னேற்ற திட்டத்தின் கீழ் பயனடைந்த கோவை மாவட்ட பயனாளிகள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி



கோயம்புத்தூர் மாவட்டம் தாட்கோ மூலமாக முதலமை ச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார முன்னேற்ற திட்டத்தின்கீழ் பயனடைந்த பயனாளிகள் தமிழ்நாடு முதலமைச்சருக்கு நிறைந்த மனதுடன் நன்றியினை தெரிவித்தனர்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடையும் வகையில் முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதாரமுன்னேற்ற திட்டத்தின் கீழ் தாட்கோ வழியே பல்வேறு பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை தமிழக அரசு அறிவித்து செயல்படுத்தி வருகின்றது. 35 சதவீதம் மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ.3.50 இலட்சம் வரை மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்கப்பட்டு வருகிறது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் தாட்கோ வழியே CMARISE திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின வகுப்பைச் சார்ந்த மக்களுக்கு 20242025 ஆம் ஆண்டு 79 நபர்களுக்கு ரூ.5.46 கோடி மானியத்துடன் கூடிய கடனுதவியும், 2025–2026 ஆம் ஆண்டு 56 நபர்களுக்கு ரூ.3.92 கோடி மானியத்துடன் கூடிய கடனுதவிம் என கடந்த இரண்டு ஆண்டுகளில் 135 நபர்களுக்கு ரூ.9.38 கோடி மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.



இத்திட்டத்தின் கீழ் சுற்றுலா வாகனம், பயனியர் ஆட்டோ, மாடு ஆடு பண்ணை, கான்கிரீட் கலவை இயந்திரம், செங்கல் தயாரிக்கும் இயந்திரம், துணிக் கடை, மளிகை கடை, உணவகம், டிஜிடல் ஸ்டூடியோ மற்றும் கணினி மையம் போன்ற தொழில்கள் செய்து தொழில்முனைவோராக பயனடைந்துள்ளார்கள்.



அதன்படி, கோயம்புத்தூர் மாவட்டத்தில் தாட்கோத் துறையின் முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவு திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாவட்டம் வெள்ளக்கிணறு பகுதியில் வசிக்கும் திரு.அருண்குமார் பயனாளி என்பவருக்கு தாட்கோ மூலம் ரூ.3.50 இலட்சம் மானியத்துடன், ரூ.10,59,760 வங்கி கடனுடன் சேர்த்து ரூ.14,09,760 மதிப்பில் சுற்றுலா வாகனம் வாங்கிட மானியம் வழங்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவு திட்டத்தின் கீழ் பயனடைந்த பயனாளியான திரு.அருண்குமார் அவர்கள் நிறைந்தது மனம் நிகழ்ச்சியில், தெரிவித்ததாவது,

என் பெயர் அருண் குமார். நான் 10ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். துடியலூர் அருகே உள்ள வெள்ளக்கிணறு பகுதியில் வசித்து வருகிறேன். தற்போது வாடகைகார் ஓட்டுனராக வேலை பார்த்துக் கொண்டியிருந்தேன். நான் சொந்தமாக வாகனம் வாங்கி ஓட்டுவதற்கு எனக்கு ஆசை இருந்தது. ஆனால் அதற்கான பொருளாதார வசதி என்னிடமில்லை.

இந்நிலையில், தாட்கோத் துறையின்மூலம் முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவு திட்டத்தின் கீழ் சுற்றுலா வாகனம் வாங்க மானியத்துடன் கடன் உதவி பெற விண்ணப்பித்தேன்.

அதனைத்தொடர்ந்து, என்னுடைய விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, தாட்கோத்துறையின் மூலம் எனக்கு ரூ.3.50 இலட்சம் மானியத்துடன், ரூ.10,59,760 மதிப்பில் வங்கி கடனுடன் சேர்த்து ரூ.14,09,760 மதிப்பில் சுற்றுலா வாகனம் வாங்கிட மானியம் வழங்கப்பட்டுள்ளது.

அரசு மானிய தொகை எனக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. என்னுடைய வருமானம் உயர்ந்துள்ளது. மேலும், வாடகை கார் ஓட்டுனராக வேலை பார்த்து வந்த நான் இன்று ஒரு வாகனத்தின் உரிமையாளராக நான் இருக்கிறேன். என்னுடைய எதிர்காலம் சிறப்பாக அமைய இது போன்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சருக்கு எனது நன்றியினை நிறைந்த மனதுடன் தெரிவித்துக்கொள்கிறேன் என தெரிவித்தார்.

**தொகுப்பு**
**ஆ.செந்தில் அண்ணா**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
**இரா.சரண்**
உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி)
கோயம்புத்தூர் மாவட்டம்.



திருப்பத்தூர்மாவட்டம்நாட்றம்பள்ளிகிழக்கு ஒன்றியம்திம்மாம்பேட்டைஅரசுஆரம்பப் பள்ளியில் மாவட்ட அளவிலான கலைத்திருவிழாவில் ஊ.ஒ.ஆ.பள்ளி திம்மாம்பேட்டை மாணவிகள் தனி நபர் நடனம் விகாஷினி மெல்லிசைப்பாடல் கோமுகில் ஆகிய இருவரும் மாவட்டஅளவில்வெற்றிபெற்று,மாநிலஅளவிலானபோட்டிகளுக்குதகுதிபெற்றுள்ளனர்.

# சங்ககிரி சுப்பிரமணியசுவாமி கோவிலில் திருக்கல்யாணம்!

சங்ககிரி, அக். 30

சங்ககிரி அக்கமாபேட்டையில் உள்ள சுப்பிரமணி யசுவாமி கோயிலில் கந்த சஷ்டி திருவிழாவை முன்னிட்டு திருக் கல்யாண உற்சவம் நடைபெற்றது.

கந்த சஷ்டி திருவிழாவா னது கடந்த புதன் கிழமை காலையில் கணபதி ஹோமம் மற்றும் கொடியேற்றத்துடன் தொடங்கியது. தினசரி பலவித திரவிய அபிஷேகம், வள்ளி தெய்வானை சமேதமாக சிறப்பலங்காரத்தில் சுப்பிரமணியசுவாமி திருவீதி உலா நடைபெற்றது. விழாவின் முக்கிய நிகழ்வான சூரசம்ஹார விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. திருக்கல்யாண உற்சவத்தை முன்னிட்டு நேற்று காலையில்நலுங்குபூஜைஅபிஷேகமும், மாலையில் பெண் அழைப்பு ஊர் வலமும் நடைபெற்றது. அதனை தொடர்ந்து கோயில் வளாகத்தில் அமைக்கப்பட்ட மேடையில் மாப்பிள்ளை அலங்காரத்தில்சுப்பிரமணியசுவாமியும், மணப்பெண் அலங்காரத்தில் வள்ளியும்,தெய்வானையும் காட்சியளித்தார்கள். பின்னர் திருமந்திரங்கள் முழங்க திருக்கல்யாண உற்சவம் விமரிசையாக பக்தர்கள் முன்னிலையில் நடைபெற்றது. மஹாதீபாராதனைக்கு பின் அன்னதானம் நடைபெற்றது. இந்த திருக்கல்யாண உற்சவத்தில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். இன்று மாலை ஆறு மணியளவில் ஊஞ்சல் சேவை நடைபெற்று, திருக்கொடி இறக்கப்பட்டு விழா நிறைவு பெறுகிறது.

